ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2189/53 - 2020 අගෝස්තු මස 22 වැනි සෙනසුරාදා - 2020.08.22
2189/53 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 22 ஆந் திகதி சனிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பி. 94/47 (v)

**(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

6(2) (ஆ) மற்றும் 21(2) (ஆ) ஆம் பிரிவுகளின் கீழான கட்டளை

(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினாலும் 21 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, நகர அபிவிருத்தி நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளையின் மூலம்–

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படும் காணி இடப்பரப்பு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்திற்காக நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாதல் வேண்டும் என்பதுடன் "அம்புல்கம ரஜமஹா விகாரை இடப்பரப்பு" என அழைக்கப்படுதலும் வேண்டும் என வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) "அம்புல்கம ரஜமஹா விகாரை இடப்பரப்புக்காக" வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்புக்கு உருவரைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமெனப் பணிக்கின்றேன் ; என்பதுடன்

(இ) மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 6(2) (ஆ) மற்றும் 21(2) (ஆ) என்பவற்றின் கீழ் ஆக்கப்பட்டதும் 2008, ஒற்றோபர் 20 ஆந் திகதிய 1572/5 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை இல்லாதொழிக்கின்றேன்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.

கொழும்பு,
2020, யூலை 27.

1A – G 32646 – 36 (2020/08)
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

*அம்புல்கம ரஜமகா விகாரை இடப்பரப்பைக் கொண்டுள்ள காணி இடப்பரப்பு*

*மேல் மாகாணம், கொழும்பு நிர்வாக மாவட்டத்தில் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவினுள் ஜல்தர மற்றும் ஹென்பிற்ர கிராமங்களில் அமைந்துள்ளனவும் 2008, யூன் 25 ஆந் திகதிய CO/HMG/07/586 ஆம் இலக்க அளவையின் தலைமையதிபதியின் வரைபடத்தில் காணித்துண்டுகள் 1, 2 மற்றும் 3 எனக் குறித்துரைக்கப்பட்டனவும் பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளதுமான 4.19968 ஹெக்டேயர் விஸ்தீரணத்தில் உள்ளடங்கியுள்ள காணி இடப்பரப்பு-*

**காணித் துண்டு 1**

வடக்கு : *டி. சீ. சமரதுங்க, ஏனையோர்கள் மற்றும் கே. ரீ. விஜேரத்ன போன்றோர்களினால் உரிமை கோரப்பட்ட பட்டதெம்பககவத்தை ;*

கிழக்கு : *கே. ரீ. விஜேரத்ன அவர்களினால் உரிமை கோரப்பட்ட பட்டதெம்பககவத்தை வீதி, சிறியலதா விதான மற்றும் ஏனையோரினால் உரிமை கோரப்பட்ட பட்டதெம்பககவத்தை படிகள், எல். ஆர். ஏ. சுவர்ணா மணிகே அவர்களினால் பட்டதெம்பககவத்தை உரிமை கோரப்படவில்லை. மேலும் ஆர். ஏ. லீலாவதி அவர்களினால் உரிமை கோரப்பட்ட பட்டதெம்பககவத்தை ;*

தெற்கு : *ஏ. வீ. அலிசோன மற்றும் கே. டி. எஸ். பெரேரா அவர்களினால் உரிமை கோரப்பட்ட ஒற்றையடிப்பாதை, பட்டதெம்பககவத்தை ;*

மேற்கு : *வீதி.*

**காணித் துண்டு 2**

வடக்கு : *பிரின்சி அத்தநாயக்க மற்றும் ஏனையோர்களினால் உரிமை கோரப்பட்ட அம்புல்கன்கந்த, ஏ. ஏ. பி. மஞ்சுள, கே. ரம்யலதா, எஸ். ஏ. ரஞ்ஜனி மற்றும் ஏசியன் நிதிக் கம்பனி லிமிட்டெட்டினால் கோரப்பட்ட பிலசிட் வியு ;*

கிழக்கு : *வீதியும் மற்றும் காணித்துண்டு 13 உம் ;*

தெற்கு : *காணித்துண்டுகள் 13 மற்றும் 3 ;*

மேற்கு : *பிரின்சி அத்தநாயக்க, ஏனையோர்கள், ஏ. ஏ. பி. மஞ்சுள அவர்களினால் உரிமை கோரப்பட்ட 3 என்ற அம்புல்கன்கந்த காணித்துண்டு.*

**காணித் துண்டு 3**

வடக்கு : *காணித்துண்டு 2 ;*

கிழக்கு : *காணித்துண்டுகள் 2 மற்றும் 13 ;*

தெற்கு : *காணித்துண்டுகள் 13 மற்றும் 12 ;*

மேற்கு : *காணித்துண்டுகள் 6, 5, 4, 13 மற்றும் பிரின்சி அத்தநாயக்க மற்றும் ஏனையோர்களினால் உரிமை கோரப்பட்ட அம்புல்கன்கந்த.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*